[2012 மே 8

230—

கால்வாய் சீரமைத்தல்

***670—திரு. ஆர். அருள்செல்வன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பழங்காவேரி கால்வாயைச் சீரமைத்து, அதன்மூலம் குளங்களுக்கு நீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ)

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்ப எழுத்துகளுக்கெல்லாம் முதல் எழுத்து 'அ'. அதேபோல முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராகத் திகழ்கின்ற அம்மாவினுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றும் என்ற உறுதியை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.*

திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 14 கிலோ மீட்டர் நீளமுள்ள பழங்காவேரி ஆறு, சாக்கடையாக மாறியுள்ளது. குறிப்பாக நகராட்சிக்குட்பட்ட 2 கிலோ மீட்டர் தூரம் சாக்கடையாக மாறியுள்ளதால் கொசுத் தொல்லையும், துர்நாற்றமும் அதிகமாக உள்ளது. ஆகவே, அரசு நடவடிக்கை எடுத்து, இந்த ஆற்றைத் தூர் வாரி கான்கிரீட் லைனிங் அமைத்து, பாசனத்தில் உள்ள 88 குளம், குட்டைகளிலும் நீரைத் தேக்கி, நீர்நிலைகளைப் பாதுகாக்க ஆவன செய்யுமா என்று பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

2012 மே 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை நகர எல்லைக்குள் ஓடும் பழைய பழங்காவேரி வாய்க்கால் 4 கிலோ மீட்டர் முதல் 7.4 கிலோ மீட்டர் வரை கடைகளும், வீடுகளும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கழிவு நீர் மற்றும் இதர குப்பைகள் வாய்க்காலில் சேர்ந்து சுகாதாரக் கேடு விளைவிப்பதாக உள்ளது. எனவே, இதற்கு நிரந்தரத் தீர்வு காண பழைய மற்றும் புதிய பழங்காவேரி வாய்க்கால்களைத் தூர் வாரவும், மயிலாடுதுறை நகர எல்லைக்குள் ஓடும் பழைய பழங்காவேரி வாய்க்காலுக்கு 4 கிலோ மீட்டர் முதல் 7.4 கிலோ மீட்டர் வரை கான்கிரீட் தடுப்புச் சுவர் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.*

திரு. ஆர். அருள்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. 2-3-2010 அன்று பழங்காவேரி பாசனத்தால் பயன்பெறும் குளம், குட்டைகள் 88 இன் ஆக்கிரமிப்பினை அகற்றி, நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற நீதிமன்ற உத்தரவை அன்றைய அரசு நிறைவேற்றவில்லை. நேற்று 7-5-2012 அன்று பேரவை விதி 110 இன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கிய ரூ.1,560 கோடியில் இத்திட்டத்தினையும் செயல்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கெனவே பரிசீலனையில் உள்ளது; நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 231, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*